The Times Of India

Dated: 26.11.2024


# EC decision on AIADMK symbol likely in a week

TIMES NEWS NETWORK

**Chennai:** The Election Commission of India (ECI) has said a decision would be taken within a week on a pending representation seeking not to allot the two leaves symbol to AIADMK until the civil suits disputing the leadership of the party are decided.

The ECI made the submission in Madras high court on Monday, when a related case came up before a division bench of Justice R Subramanian and Justice C Kumarappan for further hearing. The case was filed by Suryamoorthy of Dindigul.

File photo



A kid passes by the two leaves symbol of AIADMK

According to the petitioner, he made several petitions to the ECI on the inter-party disputes in the AIADMK from 2017 to 2022. Of the several representations, he requested the ECI not to allocate the two leaves symbol either to the AIADMK or any other party until the civil suits challenging the leadership of the party are decided, he said.

When the plea came up for hearing, the court wondered why no action was taken on the representation filed as early as February. To this, the commission informed the court that a decision would be taken on the representation filed within a week.

Recording the submission, the court adjourned the hearing to Dec 2.

The Times Of India

Dated: 26.11.2024

# ECI receives over 14 lakh applications

TIMES NEWS NETWORK



**Chennai:** Election Commission of India (ECI) on Monday said it had received a total of 14,000,615 applications during four days of special camps conducted in Tamil Nadu for inclusion, deletion, linking of Aadhaar with EPIC, modification and transposition of entries.

The special camps were conducted on Nov 16, 17, 23 and 24.

A total of 2.64 lakh applications were received on Nov 16, 4.21 lakh applications on Nov 17, 2.73 lakh applications on Nov 23 and 4.41 lakh applications on Nov 24.

Out of the total 14 lakh applications, the majority (8.38 lakh) were related to new registration of general voters above the age of 18.

Dt.Next

Dated: 26.11.2024

## 14 lakh roll revision forms received in State, says EC

**CHENNAI: Over 14 lakh applications, including 8.38 lakh applications for inclusion in the electoral rolls, have been received during the special camps conducted as part of the Special Summary Revision of Photo Electoral Rolls 2025 in Tamil Nadu, the Election Commission of India has said.**

In a highlight of the present roll revision, four overseas electors have also submitted Form 6A to enrol in the rolls via online.

The special drive was conducted on November 16, 17, 23 and 24 in designated locations in all the 234 constituencies in the State as per the direction of the Election Commission of India.

A total of 14,00,615 applications were received for inclusion, deletion, linking Aadhaar with EPIC, modification and transposition of entries were taken up during the four special camps. 8,38,016 persons submitted Form 6 for inclusion of their names in the electoral rolls, while 4,42,111 have submitted Form 8 for shifting of residence/ correction of entries in existing electoral roll/ replacement of EPIC or marking of Persons with Disability, according to Tamil Nadu Chief Electoral Officer.

As many as 1,19,701 have submitted Form 7 for objection to the proposed inclusion/deletion of name in the existing electoral roll and 783 submitted Form 6 B for linking of their Aadhaar with EPIC.

Dt.Next

Dated: 26.11.2024

# Will dispose of 'Two Leaves' freeze petition in a week: ECI

**CHENNAI: The Election Commission of India (ECI) has assured the Madras High Court that it will dispose of the representation demanding that the Two Leaves symbol be withheld from AIADMK, responding to a petition seeking action over the issue.**

A division bench of Justice R Subramanian and Justice C Kumarappan heard a petition filed by S Surya Moorthi from Dindigul, seeking to direct the ECI to take action on his representation regarding the allocation of Two Leaves symbol to AIADMK.

The standing counsel for ECI, Niranjan Rajagopalan, submitted that the petitioner's representation will be considered and disposed of within a week. After the submission, the bench posted the matter to December 2 for further submission.

The litigant contented that from 2017 to 2022, he lodged various complaints before the ECI regarding the AIADMK internal issue and the allotment of the Two Leaves symbol. However, the commission failed to take any action, he said.

The litigant alleged that after the demise of the late Chief Minister and general secretary of AIADMK J Jayalalithaa, the party is functioning in a dictatorial manner against rules.

# Senthilbalaji's appeal on deferring PMLA case: HC reserves order

**CHENNAI: The Madras High Court reserved the final order in the plea of Electricity Minister V Senthilbalaji seeking to quash a lower court order dismissing his petition to defer the trial in the money laundering case.**



A division bench of Justice SM Subramaniam and Justice M Jothiraman heard the criminal revision petition moved by the minister to quash the order issued by the city principal sessions court.

The special public prosecutor of the Directorate of Enforcement (ED) N Ramesh submitted that since the special court for hearing the Prevention of Money Laundering Act (PMLA) commenced the examination of witnesses, there is nothing to sustain the revision petition and sought to close the matter. The counsel told the court that four witnesses had already been examined. After hearing the submissions the bench posted the matter on November 26 for final orders.

On February 15, the then principal sessions judge, Chennai, S Alli dismissed the plea of Senthilbalaji to defer the trial in the money laundering case registered by the ED.

The minister submitted that since the trial of the scheduled offence in the job racket case registered by the Central Crime Branch (CCB) police is still pending before the special court, so, the money laundering proceedings initiated by ED for the same offence should not be continued and sought to defer the trial. However, the principal judge refused the contentions of Senthilbalaji and dismissed the petition holding that there is no bar from framing charges against the minister in the money laundering case.

Aggrieved by the order, the minister moved the revision petition.

The Hindu (Tamil)
Dated: 26.11.2024

# வாக்காளர் பட்டியல் திருத்த முகாமில் 14 லட்சம் பேர் விண்ணப்பம்

## தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா தகவல்

சென்னை

தமிழகத்தில் 4 நாட்கள் நடத்தப்பட்ட வாக்காளர் பட்டியல் திருத்த சிறப்பு முகாம்களில் பெயர் சேர்க்க 8.38 லட்சம் விண்ணப்பங்கள் உட்பட மொத்தம் 14 லட்சம் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு:

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தல்படி, வரும் 2025 ஜனவரி 1-ம் தேதியை தகுதி நாளாக கொண்டு, புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்த பணிகள் கடந்த அக்டோபர் 29-ம் தேதி தொடங்கின.

ஏற்கெனவே அறிவித்தபடி, முதல்கட்டமாக கடந்த நவம்பர் 16, 17-ம் தேதிகளில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டன.

இந்த நிலையில், 2-ம் கட்ட சிறப்பு முகாம்கள் நவம்பர் 23, 24-ம் தேதிகளில் அனைத்து சட்டப்பேரவை தொகுதிகளிலும், வாக்குச்சாவடி அமைவிடங்களில் நடைபெற்றன.

இந்த 2-ம் கட்ட முகாமில், வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கல், திருத்தல், இடமாற்றம், ஆதார் எண்ணை இணைப்பதற்காக படிவங்கள் பெறப்பட்டன. அதன்படி பெயர் சேர்க்க 3 லட்சத்து 95,981 விண்ணப்பங்கள், வெளிநாடு வாழ் இந்தியர்களின் 4 விண்ணப்பங்கள், ஆதார் இணைப்புக்கு 364, பெயர் நீக்கம் செய்ய 75,573, திருத்தம் மேற்கொள்ள 2 லட்சத்து 43,180 என மொத்தம் 2 நாட்களில் 7 லட்சத்து 15,102 விண்ணப்பங்கள் பெறப்பட்டன.

4 நாட்கள் நடைபெற்ற முகாமிலும் சேர்த்து, பெயர் சேர்க்க 8 லட்சத்து 38,016, வெளிநாடு வாழ் இந்தியர்கள் பெயர் சேர்க்க 4, ஆதார் இணைப்புக்கு 783, பெயர் நீக்கம் செய்ய 1 லட்சத்து 19,701, திருத்தம் மேற்கொள்ள 4 லட்சத்து 42,111 என மொத்தம் 14 லட்சத்து 615 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

இவ்வாறு தெரிவித்துள்ளார்.

The Hindu (Tamil)
Dated: 26.11.2024

# இரட்டை இலை சின்னம் குறித்த மனு மீது ஒரு வாரத்தில் உத்தரவு

## நீதிமன்றத்தில் தேர்தல் ஆணையம் தகவல்

சென்னை

நிலுவை வழக்குகள் முடிவுக்கு வரும் வரை அதிமுகவுக்கு இரட்டை இலை சின்னத்தை ஒதுக்கக் கூடாது என்ற விண்ணப்பம் மீது ஒரு வாரத்தில் தகுந்த உத்தரவு பிறப்பிக்கப்படும் என தலைமை தேர்தல் ஆணையம் உயர் நீதிமன்றத்தில் தகவல் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக திண்டுக்கல்லைச் சேர்ந்த சூர்யமூர்த்தி என்பவர் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவில், "அதிமுகவின் உட்கட்சி விவகாரம் தொடர்பாக கடந்த 2017-ம் ஆண்டு முதல் 2022-ம் ஆண்டு வரை தொடர்ச்சியாக தேர்தல் ஆணையத்துக்கு பல புகார்களை அளித்துள்ளேன். குறிப்பாக அதிமுகவின் உட்கட்சி விவகாரம் தொடர்பாக தாக்கல் செய்துள்ள உரிமையியல் வழக்குகள் முடிவுக்கு வரும் வரை அதிமுகவுக்கு இரட்டை இலை சின்னத்தை ஒதுக்கக் கூடாது என தேர்தல் ஆணையத்துக்கு கடந்த பிப்ரவரி மாதம் மனு அளித்தும் இதுவரையிலும் எந்த பதிலும் இல்லை. எனவே இதுதொடர்பாக உரிய உத்தரவு பிறப்பிக்க தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும்" என கோரியிருந்தார்.

இந்த மனு நீதிபதிகள் ஆர்.சுப்பிரமணியன், சி.குமரப்பன் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள், கடந்த பிப்ரவரி மாதம் அளித்த விண்ணப்பம் மீது ஏன் இதுவரையிலும் தலைமை தேர்தல் ஆணையம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என கேள்வி எழுப்பினர். அதற்கு ஆணையம் தரப்பில் பதில் அளிக்கும்போது, அந்த மனு மீது இன்னும் ஒரு வாரத்தில் தகுந்த உத்தரவு பிறப்பிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. அதைப்பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், விசாரணையை வரும் டிச.2-க்கு தள்ளி வைத்துள்ளனர்.

The Hindu (Tamil)
Dated: 26.11.2024

# குப்பையில் கிடந்த வாக்காளர் அட்டைகள்

## தவறாக அச்சானவை என வருவாய் துறை விளக்கம்

■ சென்னை

சென்னை பெரியமேடு பகுதியில் உள்ள புரசைவாக்கம் தாலுகா அலுவலக வளாகத்தில், அரசு கேபிள் நிறுவனத்தின் இ-சேவை மையம் இயங்கி வருகிறது.

இம்மைய பணியாளர்கள் நேற்று, வாக்காளர் அட்டைகளை குப்பையில் கொட்டியுள்ளனர். அரசு அடையாள ஆவணங்களை இப்படி குப்பையில் கொட்டியதால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து வருவாய்த் துறை அதிகாரிகள் நேரில் ஆய்வு செய்து, குப்பையில் கொட்டப்பட்ட வாக்காளர் அட்டைகளை சேகரித்தனர்.

இதுதொடர்பாக வருவாய்த் துறை அதிகாரிகள் கூறியதாவது:

கடந்த 2018-ம் ஆண்டுக்கு முன்பு வரை இ-சேவை மையங்களில் ரூ.25 செலுத்தி, வாக்காளர் அட்டை, ஆதார் அட்டை, குடும்ப அட்டை போன்றவற்றை பெற்றுக்கொள்ளும் வசதி இருந்தது. அப்போது அச்சிடும்போது சரியாக அச்சிடப்படாதது, எழுத்துப் பிழையுடனோ, புகைப்படம் மாறியோ அச்சானது போன்றவை கழிவாக அலுவலகத்திலேயே வைக்கப்பட்டிருந்தன. அந்த அலுவலகத்தில் எலிகள் தொல்லை அதிகரித்ததால், அலுவலகத்தை தூய்மைப்படுத்தி, அடையாள ஆவண கழிவுகளை இ-சேவை மைய பணியாளர்கள் குப்பையில் கொட்டியுள்ளனர்.

அந்த ஆவணங்களை முறைப்படி அழிப்பது தொடர்பாக அவர்களுக்கு விழிப்புணர்வு இல்லை. அதனால் அவர்களுக்கு விவரம் தெரிவித்து, எச்சரித்திருக்கிறோம்.

இங்கு வாக்காளர் அட்டை மட்டுமின்றி, ஆதார், குடும்ப அட்டை கழிவுகளும் இருந்தன. அவற்றை சேகரித்து வைத்திருக்கிறோம். முறைப்படி அழிக்க நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அதிகாரிகள் கூறினர்.

Daily Thanthi
Dated: 26.11.2024

### இரட்டை இலை சின்னம் விவகாரம்:

# ஒரு வாரத்துக்குள் பரிசீலிக்கப்படும்

## ஐகோர்ட்டில் தேர்தல் ஆணையம் தகவல்

சென்னை, நவ.26-

சென்னை ஐகோர்ட்டில், சூர்யமூர்த்தி என்பவர் தாக்கல் செய்துள்ள மனுவில், 'அ.தி.மு.க.வின் உள்கட்சி விவகாரம் தொடர்பாக தாக்கல் செய்துள்ள உரிமையியல் வழக்குகள் முடிவுக்கு வரும் வரை அ.தி.மு.க.வுக்கு இரட்டை இலை சின்னத்தை ஒதுக்கக்கூடாது என தேர்தல் ஆணையத்துக்கு கடந்த பிப்ரவரி மாதம் மனு அனுப்பினேன். இதுவரையிலும் எந்த பதிலும் இல்லை. எனவே, என் விண்ணப்பத்தை பரிசீலித்து உரிய உத்தரவு பிறப்பிக்க தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும்' என்று கூறியிருந்தார். இந்த மனு நீதிபதிகள் ஆர்.சுப்பிரமணியன், சி.குமரப்பன் ஆகியோர் கொண்ட டிவிசன் பெஞ்ச் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள், கடந்த பிப்ரவரி மாதம் அளித்த விண்ணப்பத்தை ஏன் இதுவரை பரிசீலிக்கவில்லை? என்று தேர்தல் ஆணையத்துக்கு கேள்வி எழுப்பினர். அதற்கு தலைமை தேர்தல் ஆணையம் தரப்பில் ஆஜரான வக்கீல், மனுதாரர் விண்ணப்பத்தை பரிசீலித்து ஒரு வாரத்துக்குள் தகுந்த உத்தரவு பிறப்பிக்கப்படும் என்று கூறினார். இதையடுத்து, விசாரணையை வருகிற டிசம்பர் 2-ந்தேதிக்கு நீதிபதிகள் தள்ளிவைத்தனர்.

Daily Thanthi
Dated: 26.11.2024

சாதி, மத ரீதியாக வாக்குகளை சேகரிக்கும்

## அரசியல் கட்சிகளை கண்காணிக்க ஆணையம் அமைக்க வழக்கு

### தேர்தல் ஆணையம் பதில் அளிக்க ஐகோர்ட்டு உத்தரவு

சென்னை, நவ.26-

சென்னை ஐகோர்ட்டில், ராஜேஷ் அனுர் மகிமைதாஸ் என்பவர் தாக்கல் செய்துள்ள மனுவில், 'தேர்தல் நேரத்தில் சாதி, மதம், மொழி வாரியாக வாக்குகளை சேகரிப்பது என்பது ஊழல் நடவடிக்கை ஆகும். அதேபோல, வெறுப்பு பேச்சுகளை கட்டுப்படுத்தவும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அனைத்து மாநில அரசுகளுக்கும், சுப்ரீம் கோர்ட்டு கடந்த 2017-ம் ஆண்டு உத்தரவிட்டுள்ளது. ஆனால், தேர்தல் நேரங்களில் மட்டுமல்லாமல், தேர்தல் அல்லாத காலங்களிலும் கூட அரசியல் கட்சிகள் தங்களது சுய அரசியல் லாபத்துக்காக சாதி, மதம், மொழி ரீதியாக வாக்காளர்களை பிளவுபடுத்தி பிரிவினைவாதத்தை தூண்டுகின்றன.

மக்களை சாதி, மத, மொழி ரீதியாக பிரித்தாளுவது அரசியலமைப்பு சட்டத்துக்கு விரோதமானது. எனவே வாக்காளர்களை சாதி, மத, மொழி ரீதியாக பிரித்து வாக்கு சேகரிக்கும் நடவடிக்கையை கண்காணிக்க ஓய்வு பெற்ற நீதிபதிகள், மனித உரிமை ஆர்வலர்கள் அடங்கிய சுதந்திரமான ஆணையம் ஒன்றை அமைக்க தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும்' என்று கூறியிருந்தார். இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் ஆர்.சுப்பிரமணியன், சி.குமரப்பன் ஆகியோர், இந்த வழக்கிற்கு தலைமை தேர்தல் ஆணையம் 2 வாரத்துக்குள் பதிலளிக்க வேண்டும் என்று உத்தரவிட்டனர்.

Daily Thanthi
Dated: 26.11.2024

சென்னை மாவட்டத்தில் நடந்த

# வாக்காளர் பட்டியல் சிறப்பு முகாமில் 89 ஆயிரம் பேர் விண்ணப்பம்

## 58 ஆயிரம் இளம்வாக்காளர்கள் பெயர் சேர்க்க ஆர்வம்

சென்னை, நவ.26-

சென்னை மாவட்டத்தில் நடந்த வாக்காளர் பட்டியல் சிறப்பு முகாமில் 89 ஆயிரம் பேர் விண்ணப்பம் வழங்கியுள்ளனர். 58 ஆயிரம் இளம் வாக்காளர்கள் பெயர் சேர்க்க விண்ணப்பித்துள்ளனர்.

### சிறப்பு முகாம்

சென்னை மாவட்டத்துக்குட்பட்ட வாக்காளர்கள், வாக்காளர் பட்டியலில் திருத்தம் செய்வதற்கு வசதியாக கடந்த 16,17 மற்றும் 23, 24 ஆகிய தேதிகளில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டது. மொத்தம் 947 வாக்குச்சாவடி மையங்களில் இந்த முகாம் நடந்தது. இதில், வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கம், திருத்தம், இடமாற்றம் ஆகியவற்றுக்கான விண்ணப்பப் படிவங்கள் பெறப்பட்டது. 4 நாட்கள் நடைபெற்ற இந்த சிறப்பு முகாமில் மொத்தம் 89 ஆயிரத்து 256 பேர் விண்ணப்பம் வழங்கியுள்ளனர்.

இதில், பட்டியலில் பெயர் சேர்க்கப்படாமல் உள்ளவர்கள் மற்றும் 18 வயதை பூர்த்தி அடையும் நிலையில் உள்ள இளம் வாக்காளர்கள் 58 ஆயிரத்து 374 பேர் படிவம் வழங்கியுள்ளனர். இதுபோக, பெயர் நீக்கம் செய்ய 1,371 பேரும், இடமாற்றம் செய்வது குறித்து 29 ஆயிரத்து 501 பேரும், வாக்காளர் அட்டையுடன் ஆதார் எண் இணைக்க 10 பேரும் விண்ணப்பம் வழங்கியுள்ளனர்.

### பெரம்பூரில் அதிகம்

அதிகபட்சமாக பெரம்பூர் தொகுதியில் 6,097 பேர் விண்ணப்பம் வழங்கியுள்ளனர். தொடர்ந்து, திரு.வி.க. நகர் (தொகுதி) - 5,306 பேர், ஆர்.கே.நகர் - 5,227 பேர், கொளத்தூர் - 4,869 பேர், விருகம்பாக்கம் - 4,726 பேர், வில்லிவாக்கம் - 4,157 பேர், சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி - 4,005 பேர், அண்ணாநகர் - 3,905 பேர், மயிலாப்பூர் - 3,328 பேர், சைதாப்பேட்டை - 3,093 பேர், ஆயிரம் விளக்கு - 2,729 பேர், வேளச்சேரி - 2,647 பேர், எழும்பூர் - 2,024 பேர், ராயபுரம் - 1,919, துறைமுகம் - 1,874 பேர் விண்ணப்பம் வழங்கியுள்ளதாக மாநகராட்சி அதிகாரிகள் தெரிவித்தனர்.

Daily Thanthi
Dated: 26.11.2024

# வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க 28-ந் தேதி கடைசி நாள்

## இதுவரை 14.66 லட்சம் பேர் விண்ணப்பம்

சென்னை, நவ.26-
வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க 28-ந்தேதி கடைசி நாளாகும். இதுவரை 14.66 லட்சம் பேர் விண்ணப்பம் செய்துள்ளனர்.

### வாக்காளர் பட்டியல்

இந்திய தேர்தல் ஆணையம் ஜனவரி 1-ந் தேதியை தகுதி நாளாக கொண்டு வாக்காளர் பட்டியல் தயாரித்து வருகிறது.

அதற்கு முன்னேற்பாடாக கடந்த அக்டோபர் மாதம் 29-ந் தேதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. இந்த பட்டியலில் பெயர் இல்லாதவர்கள், தங்களது பெயர்களை சேர்த்து கொள்ளலாம் என்றும், முகவரி மாற்றம், பெயர் நீக்கம் ஆகிய பணிகளையும் மேற்கொள்ளலாம் என்றும் தேர்தல் ஆணையம் அறிவித்தது.

அதற்காக கடந்த 16, 17, 23 மற்றும் 24 ஆகிய நான்கு நாட்கள் வாக்குச்சாவடி மையங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டன. இது தவிர ஆன்லைன் முறையிலும் விண்ணப்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

### ஆதார் எண்

இந்த சிறப்பு முகாம்களில் மட்டும் மொத்தம் 14 லட்சத்து 615 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. அதில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க 8 லட்சத்து 38 ஆயிரத்து 16 பேர் மனு கொடுத்து இருக்கின்றனர். வெளிநாட்டில் வசிக்கும் 4 பேர் தங்களது பெயரை சேர்க்க கூறி விண்ணப்பித்து இருக்கிறார்கள்.

வாக்காளர் அடையாள அட்டையுடன் ஆதார் எண்ணை இணைக்க 783 பேரும், பெயரை நீக்க கோரி 1 லட்சத்து 19 ஆயிரத்து 701 பேரும், பெயர் திருத்தம், முகவரி மற்றும் புகைப்பட மாற்றம் ஆகிய பணிகளை மேற்கொள்ள 4 லட்சத்து 42 ஆயிரத்து 111பேரும் மனு கொடுத்து உள்ளனர். இதுதவிர ஆன்லைனில் 65 ஆயிரத்து 817 பேர் விண்ணப்பம் செய்துள்ளனர்.

### 14 லட்சத்து 66 ஆயிரம்

ஆக மொத்தம் 14 லட்சத்து 66 ஆயிரத்து 432 பேர் விண்ணப்பம் செய்துள்ளனர். பொதுமக்கள் வருகிற 28-ந் தேதி வரை சம்பந்தப்பட்ட அலுவலகங்கள் அல்லது ஆன்லைன் முறையில் விண்ணப்பம் செய்யலாம். இந்த மனுக்கள் உரிய முறையில் பரிசீலனை செய்யப்பட்டு, தகுதியானவை வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படும்.

பின்னர் இறுதி வாக்காளர் பட்டியல் அடுத்த ஆண்டு (2025) ஜனவரி மாதம் 6-ந் தேதி வெளியிடப்படும். எனவே இதுவரை பெயர் சேர்க்காத வாக்காளர்கள், அல்லது முகவரி மாற்றம் போன்ற பணிகளை மேற்கொள்ள விரும்புபவர்கள் உடனடியாக அந்த பணியினை மேற்கொள்ளலாம்.

### ஆன்லைனில் எளிதாக விண்ணப்பிக்கலாம்

வாக்காளர் பட்டியலில் பெயர் இருக்கிறதா என்பதனை பொதுமக்கள் https://www.elections.tn.gov.in பொது என்ற இணையதளத்தில் சென்று பார்க்கலாம். அதில் பெயர் சேர்க்கவோ, திருத்தம் மேற்கொள்ளவோ அல்லது ஆதார் நம்பர் சேர்க்கவோ https://voters.eci.gov.in என்ற இணையதளம், மற்றும் "வாக்காளர் உதவி" செல்போன் செயலி ஆகியவற்றின் மூலம் ஆன்லைன் முறையிலும் விண்ணப்பிக்கலாம். ஆனால் பொதுமக்களிடம் இதுகுறித்து முறையான விழிப்புணர்வு இல்லை. எனவே அதில் குறைந்தளவு விண்ணப்பங்கள் மட்டுமே பெறப்பட்டுள்ளன. இப்போது வரை சுமார் ஆன்லைனில் 65 ஆயிரத்து 817 விண்ணப்பங்கள் மட்டுமே பெறப்பட்டுள்ளன.

இதுவரை விண்ணப்பம் செய்யாத பொதுமக்கள் எங்கும் அலையாமல் வீட்டில் இருந்தப்படியே இணையதளம் மூலம் 28a-ந் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என்று அதிகாரி ஒருவர் கூறினார்.


Dinamalar, Dated: 26.11.2024

# தாசில்தார் அலுவலகத்தில் குப்பையில் வீசப்பட்ட ஆதார், வாக்காளர் அட்டை!

**சென்னை, நவ. 26–**

புரசைவாக்கம் தாசில்தார் அலுவலக வளாகத்தில், குப்பையோடு, குப்பையாக, வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அட்டைகள் வீசப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

பெரியமேடு ராஜா முத்தையா சாலையில், புரசைவாக்கம் தாசில்தார் அலுவலகம் செயல்பட்டு வருகிறது. இந்த வளாகத்தில் இயங்கி வரும் இ–சேவை மையம் அருகே, நேற்று குப்பையோடு குப்பையாக, வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அட்டைகள் வீசப்பட்டிருந்தன.



■ குப்பையில் வீசப்பட்ட ஆதார், வாக்காளர் அடையாள அட்டைகள்.

இதுகுறித்த, வீடியோ காட்சிகள் ஊடகங்களிலும், சமூக வலைதளத்திலும் வேகமாக பரவியது. சம்பவ இடம் சென்று அதிகாரிகளிடம் விசாரணை நடத்தினர்.

இதுகுறித்து, அதிகாரிகள் கூறியதாவது:

குப்பையில் வீசப்பட்ட அட்டைகள் அனைத்தும் உபயோகமற்றவை. கடந்த 2018ம் ஆண்டில், இ – சேவை மையத்திலேயே, வாக்காளர் அடையாள அட்டை அச்சிட்டு தரப்பட்டது.

அப்போது, அச்சிடப்பட்ட பிழை உள்ள கார்டுகள், நீண்ட காலமாக அலுவலகத்திலேயே வைக்கப்பட்டிருந்தன.

சில தினங்களுக்கு முன் இ–சேவை மையத்தில் எலி ஒன்று இறந்து கிடந்தது. அவற்றை சுத்தம் செய்ததோடு, தேவையற்ற கார்டுகளையும் ஊழியர்கள் அகற்றி, குப்பையில் வீசிவிட்டனர். அவற்றை அப்புறப்படுத்தி உள்ளோம்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

Dinamalar
Dated: 26.11.2024

# இரட்டை இலை ஒதுக்க தடை மனு மீது 7 நாளில் உத்தரவு

**சென்னை, நவ. 26–**

நிலுவையில் உள்ள சிவில் வழக்குகள் முடிவுக்கு வரும் வரை, இரட்டை இலை சின்னத்தை அ.தி.மு.க.,வுக்கு ஒதுக்க தடை கோரிய விண்ணப்பத்தின் மீது, ஒரு வாரத்தில் உத்தரவு பிறப்பிப்பதாக, சென்னை உயர் நீதிமன்றத்தில் தேர்தல் ஆணையம் பதில் அளித்துள்ளது.



திண்டுக்கல்லை சேர்ந்த சூரியமூர்த்தி என்பவர் தாக்கல் செய்த மனுவில், 'அ.தி.மு.க.,வில் உட்கட்சி விவகாரம், கட்சி விதிகளுக்கு முரணாக செயல்பட்டது தொடர்பாக, 2017 முதல் 2022 வரை பல புகார்களை, தேர்தல் ஆணையத்துக்கு அளித்துள்ளேன்.

'கட்சி பிரச்னை தொடர்பாக தாக்கல் செய்துள்ள சிவில் வழக்குகள் முடிவுக்கு வரும் வரை, இரட்டை இலை சின்னத்தை அ.தி.மு.க.,வுக்கு ஒதுக்கக்கூடாது எனவும், தேர்தல் ஆணையத்திடம் கோரி உள்ளேன்; எந்த பதிலும் இல்லை. என் மனு மீது விசாரணை நடத்த, தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும்' என்று கூறப்பட்டுள்ளது.

மனு, நீதிபதிகள் ஆர்.சுப்ரமணியன், சி.குமரப்பன் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. 'கடந்த பிப்ரவரியில் அளித்த விண்ணப்பத்தின் மீது, தேர்தல் ஆணையம் இதுவரை ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை' என்று, நீதிபதிகள் கேள்வி எழுப்பினர்.

அதற்கு, தேர்தல் ஆணையம் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், மனுதாரரின் விண்ணப்பத்தின் மீது ஒரு வாரத்தில் உத்தரவு பிறப்பிப்பதாக தெரிவித்தார். இதையடுத்து, விசாரணையை, டிசம்பர் 2க்கு, நீதிபதிகள் தள்ளி வைத்தனர்.